மாநில உரிமைகளைத் தி. மு. க. காத்திடும்

9308

கழகத் தலைவர் கலைஞர்

திராவிட முன்னேற்றக் கழகம்

'' அண்ணா அறிவாலயம் ''

சென்னை-600 018.

விலை 0-50 காசு

ஆய்வக நூல் நிலையம் சென்னை-18
அண்ணா அறிவாலயம்

பலகலைப் புலவர்,
தமிழ்க் "கா. சு" நினைவு இலக்கியக் குழு
சுசுவரவடிவு அகம் - குழித்தலை.
திருச்சி மாவட்டம். 639 104.

மாநில உரிமைகளைத் தி. மு. க. காத்திடும்

[தலைவர் கலைஞர் அவர்கள், 21-6-88 தினமணியில் எழுதிய கட்டுரை]

இந்தியாவின் ஒரு மாநிலத்தில் சட்டமன்றம் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப் படுமேயானால், அறிவிக்கப் பட்ட ஆறு மாதங்களுக்குள் மீண்டும் மக்களாட்சி உருவாகும் விதத்தில் தேர்தலை நடத்த வேண்டுமென்ற நிலைக்கு, மாறாக, தமிழ் நாட்டில் தேர்தல் எப்போது வரும் என்பது கேள்விக்குறியாகி விட்டிருக்கின்ற சூழ்நிலையில், நான் இதனை எழுதுகிறேன். உலகத்தில் உள்ள நாடுகளில் இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடு. ஆனால் ஜனநாயகப் பேழையின் திறவுகோலைப் பயன்படுத்த வேண்டிய தேர்தல் கமிஷன், இந்திய நாட்டில் சரியாகச் செயல்படு வதில்லை; சுதந்திரமாக இயங்குவதில்லை; சுதந்திரமாக இயங்க விடப்படுவதுமில்லை. அதன் விளைவுதான் தமிழ்நாட்டில் இன்று ஜனநாயகத்தில் ஏற்பட்டுள்ள தேக்கமாகும்.

பொருத்தமான காரணங்கள் எதுவுமில்லாமல் தேர்தலைத் தங்கள் வாய்ப்புக்கு ஏற்றவாறு தங்களுக்கு வசதியான நேரத்தில் நடத்த வேண்டுமென்று மத்திய ஆளுங்கட்சியான காங்கிரஸ் நினைக்கிறது. அதற்குத் தன்னுடன் தோழமையாக வரக்கூடு மென்று எதிர்பார்க்கின்ற அணியினரையும் பயன்படுத்திக் கொண்டு தேர்தலைத் தள்ளிபோட முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. இது ஒன்றே தமிழ் நாட்டில் காங்கிரஸ் மிக பலவீனமாகியிருக் கின்றது என்பதற்கு ஏற்ற சான்றாகும்.

ஆரம்பமே கூட்டாட்சி

1952-ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில்கூடத் தமிழ் நாட்டில் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்று ஆட்சியை அமைக்க இயலவில்லை. திரு. ராமசாமி படையாச்சி அவர்களின் தலைமை யில் இருந்த உழைப்பாளர் கட்சியையும், திரு. மாணிக்க வேலர் அவர்களின் தலைமையில் இருந்த காமன்வீல் கட்சியையும் துணை சேர்த்துக் கொண்டுதான் காங்கிரசால் அப்போது ஆட்சி அமைக்க முடிந்தது.

1957, 1962 ஆகிய இரண்டு தேர்தல்களில் மட்டுமே பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் தலைமையின் காரணமாக, இரண்டுமுறை காங்கிரஸ் தனித்து நின்று வென்றது. அப்போதும் கூடத் திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் துணை காங்கிரசுக்குத் தேவைப்பட்டது.

1967-ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள், மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையிலான சுதந்திரா கட்சியையும் பி. ராமமூர்த்தி அவர்கள் தலைமையிலான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களின் தலைமையிலான இந்திய யூனியன் முஸ்லீம்லிக் கட்சியையும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தலைமையிலான தமிழரசுக் கழகத்தையும் திரு. மூக்கையாத்தேவர் அவர்கள் தலைமையிலான பார்வர்டு பிளாக் கட்சியையும் ஓரணியில் திரட்டி - தேர்தலில் இட ஒதுக்கீடு உடன்பாடு கண்டு காங்கிரசை வீழ்த்தியது வரலாற்று உண்மையாகும்.

அதே அடிப்படையில், 1971-ம் ஆண்டு தி.மு. கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடனும், இந்திய யூனியன் முஸ்லீம்லீக்குடனும், பார்வர்டு பிளாக் கட்சியுடனும், தமிழரசுக் கழகத்துடனும், குடியரசுக் கட்சியுடனும் தேர்தலில் இட ஒதுக்கீடு உடன்பாடு கண்டு 184 இடங்களைப் பெற்றுமிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைத்தது.

குழப்பமான அணியன்று

இப்போது தி.மு. கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம்லீக், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் ஓரணியில் உடன்பாடு கொண்டு இட ஒதுக் கீடு அடிப்படையில் தேர்தலில் எப்படி நிற்க முடியும், அவர்களுக் குள் கொள்கை உடன்பாடு கிடையாதே என்று காங்கிரஸ் தலைவர் களால் பேசப்படுகிறது. 1967, 1971 மற்றும் அவற்றைத் தொடர்ந்து, கடந்த தேர்தல்களில் தி.மு. கழகமும் மற்ற கட்சிகளும் எவ்வாறு அணிசேர்ந்து இட ஒதுக்கீடுகளைச் செய்து கொண்டு போட்டியிட்டன என்பதைப் புரிந்து கொண்டால் இப்போது உருவாகியிருக்கின்ற அணி குழப்பமான அணி என்று யாருக்கும் சொல்லத் தோன்றாது.

இவர்கள் ஒருவரையொருவர் எப்படி ஜீரணிக்கப் போகிறார்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூட்டங்களில் பேசி வருகிறார்கள். ஒருவரை ஒருவர் விழுங்குவது என்ற நிலைமை ஏற்பட்டால்தான் ஜீரணிக்கக்கூடிய நிலை குறித்த பிரச்சினையே எழும். அந்தந்தக்

கட்சிகளும் அந்தந்தக் கட்சிகளுக்குரிய தனித்தன்மையோடு அவற்றின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தேர்தலில் உடன் பாடு கொள்வது இந்திய நாட்டில் பல மாநிலங்களில் நடைபெற்ற - நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளாகும். அத்தகைய அணியில் காங்கிரசும் இருந்தது உண்டு. இப்போதும் கூட உதாரணமாக, கேரளமாநிலத்தைச் சொல்லலாம். எனவே கழகம் கொண்டுள்ள உடன்பாட்டு அணியில் உள்ள கட்சிகளால் குழப்பம் ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

கூட்டணி ஆட்சி (Coalition Government) அமைக்கப் போவ தாக இந்த அணியில் உள்ள யாரும் கூறவில்லை.

'திராவிடர் இயக்க ஆட்சி போதும் போதும் என்று ஆகி விட்டது' எனக் கூறி காங்கிரஸ் ஆட்சி மீண்டும் வரவேண்டுமெனக் கற்பனைக் கனவு காண்பவர்கள் கடந்த கால காங்கிரஸ் ஆட்சியை பொற்காலம் எனக் கூறித் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிட முடியாது.

சில சாதனைகள்

ஒரு புள்ளி விவரம்

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில்தான் நாம் பிறந்த தமிழ்நாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று போராடியும் கூட உரிய பலன் கிடைக்க வில்லை. விருதுநகர் சங்கரலிங்க நாடார் அதற்காக உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டார். அப்போதும் காங்கிரஸ் ஆட்சியின் மனம் கனியவில்லை 1967-ல் தான் தி.மு. கழக ஆட்சியில் 'சென்னை ராஜ்யம்' என்ற பெயர் மாற்றப்பட்டு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

பெரியார், ராஜாஜி, அண்ணா ஆகிய முப்பெரும் தலைவர்கள் தீவிரமாக எதிர்த்தும் கூட கட்டாய இந்தி ஆதிக்கம் இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் அகற்றப்படவில்லை. அந்த ஆதிக்கத் தைக்குறைக்கும் முயற்சியாகத்தான் தி. மு. கழக ஆட்சியில் தமிழ் நாட்டுப்பள்ளிக் கூடங்களில் தமிழ், ஆங்கிலம் மட்டும்தான் இந்திக்கு இடம் இல்லை என்ற இரு மொழித் திட்டக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவை தவிர 1967 வரையிலான காங்கிரஸ் ஆட்சியையும், '67க்குப் பிறகு' 76 வரையிலான தி.மு. கழக ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பல உண்மைகள் மக்களுக்கு விளங்கும். உதாரணமாக, இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் நிலப்

பட்டா பெற்றவர்கள் தொகை 1,15 000. ஒன்பதாண்டு காலத் தி.மு. கழக ஆட்சியில் நிலப்பட்டா பெற்றவர்கள் தொகை 3,80,000.

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் மனைப் பட்டா பெற்றவர்கள் 63,770 பேர். ஒன்பதாண்டு கால தி.மு.க. ஆட்சியில் 5,14,435 பேர்.

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை சொந்தமாக்கப்படவில்லை. ஒன்பதாண்டு காலத் தி.மு. கழக ஆட்சியில் குடியிருப்பு மனைச் சட்டமே கொண்டுவரப்பட்டு, ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் பேர் அந்தச் சட்டத்தால் குடியிருப்பு மனை பெற்றார்கள். இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் உச்ச வரம்புச் சட்டம் - முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற பெயரில் ஒரு கண் துடைப்பாகக் கொண்டுவரப்பட்டதே தவிர, ஒரு அங்குல நிலம் கூட நிலமில்லாத விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. 1960-ல் உச்ச வரம்பு வரப் போகிறது என்று தெரிந்தே அதற்கு முந்தைய ஆண்டுகளில் நிலப் பிரபுக்கள் தங்கள் நிலங்களை விற்று விட்டதாக பாவனை செய்து பினாமிகளை உருவாக்கிக் கொண்டு விட்டார்கள். ஒன்பதாண்டு காலத் தி. மு. கழக ஆட்சியில்தான் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதைப் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கி, அதனால் சுமார் நாற்பதாயிரம் நிலமற்ற விவசாயிகள் நிலம் பெற்றார்கள். இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வீடுகட்டித் தரும் திட்டமே இல்லை. இந்தியாவிலேயே முதன்முறையாக முதல்மாநிலமாகத் தமிழ் நாட்டில் தி. மு. கழக ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் உருவாக்கப்பட்டு 42,000 வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்டன.

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் மின்விளக்கு வசதி பெற்ற ஊர்கள் 20.250. ஒன்பதாண்டு காலத் தி.மு.கழக ஆட்சியில் மின் விளக்கு வசதி பெற்ற ஊர்கள் 41,000. இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் மின்விளக்கு வசதி பெற்ற ஆதிதிராவிடக் காலனிகள் 2,000. ஒன்பதாண்டு காலத் தி.மு. கழக ஆட்சியில் மின் விளக்கு வசதி பெற்ற ஆதிதிராவிடக் காலனிகள் 23,000. இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் மின் இணைப்புப் பெற்ற பம்புசெட்டுகள் இரண்டு லட்சம். ஒன்பதாண்டு கால தி.மு.கழக ஆட்சியில் அந்த எண்ணிக்கை ஏழரை லட்சமாக உயர்ந்தது.

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் எட்டு லட்சம் ஏக்கரா விற்குத்தான் பாசன வசதி; ஒன்பதாண்டு காலத் தி.மு. கழக ஆட்சியில் அது பதினாறு லட்சம் ஏக்கராக விரிவடைந்தது. இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் குடிசைமாற்று வாரியம் என்ற ஒரு திட்டமே இல்லை. ஒன்பதாண்டு காலத் தி.மு.கழக ஆட்சியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டில் குடிசை மாற்றுவாரியம் அமைக்கப்பட்டு. முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டன. இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் தமிழகத்தில் பெரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் 11,164 தான். ஒன்பதாண்டு காலத் தி.மு.கழக ஆட்சியில் 26.381

ஒப்பு நோக்குவதற்காகத் தரப்பட்ட சில உதாரணங்ளே இவை. மற்றும் அணைகள், பாலங்கள், பாசன வசதிகள், மருத்துவமனைகள், இணைப்புச் சாலைகள், புதிய கல்லூரிகள், தொழிற்சாலைகள் என ஏராளமான வளர்ச்சித் திட்டங்களைத் தி.மு. கழக ஆட்சி உருவாகியிருக்கிறது என்பது ஆதாரப் பூர்வமான உண்மைகளாகும் மத்திய அரசுடன் உறவுக்குக் கைகொடுப்போம், அதே சமயத்தில் உரிமைக்கு குரல் கொடுப்போம் என அறிவித்து விட்டு அதன்படி மத்திய அரசுடன் வாதாடி, போராடி, தி.மு. கழக ஆட்சியில் தமிழ்நாட்டிற்குப் பல திட்டங்கள் பெறப்பட்டுள்ளன. சேலம் தொழிற்சாலை, நெய்வேலி இரண்டாவது சுரங்கம், தூத்துக்குடி உரத் தொழிற்சாலை போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இன்றைய ராணிப்பேட்டையில் உள்ள தொழில் வளர்ச்சியும் ஒசூர் பகுதியில் உள்ள தொழில் வளர்ச்சியும் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் தொடங்கப்பட்டவை என்பதை யாரும் மறந்து விட முடியாது இவைகளையன்னியில் சமூகப் பணிகள் என்ற முறையில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம். தொழுநோய் இரவலர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டங்கள், கைரிக்ஷா ஒழிக்கப்பட்டு இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டது போன்ற பல திட்டங்களைக் கூறலாம்.

உடனடி நடவடிக்கைகள்

நேர்மையான நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி என்பன போன்ற முழக்கங்களைச் சுலபமாகச் செய்து விடலாம். ஆனால் தி.மு.கழக ஆட்சியில் நேர்மைக்கு முரணாக ஒன்றிரண்டு தவறுகள் நிகழ்ந்த போது அதற்குக் காரணமானவர்கள்மீது கட்சி ரீதியாகவும் சட்டப் படியும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கு எடுத்துக் காட்டுகள் உண்டு.

சென்னை மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்ற ஒரு தவறு, சட்ட மன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டவுடன், அதே இடத்தில்,

அதே சமயத்தில் சிறிதும் தயக்கமின்றி மாநகராட்சி மன்றம் தி.மு. கழகத்தின் கையில் இருந்தது என்பதைப் பற்றிக் கூட கவலைப் படாமல் மாநகராட்சி மன்றத்தைக் கலைத்து குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் மீதெல்லாம் வழக்குப் போடச் செய்தது தி. மு. கழக ஆட்சி யில்தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

அமைச்சர்கள் சிலர்மீது கூட வேறு சில தவறுகள் சட்டசபை யில் சுட்டிக் காட்டப்பட்ட போது அவர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுத்துப் பதவி நீக்கம் செய்யப்பட்டது தி.மு. கழக ஆட்சியில்தான் என்பதை எண்ணிப் பார்த்தால் எவ்வித பாரபட்சமும் இன்றி நேர்மையான நிர்வாகம் நடைபெற்றது என்பதை நடுநிலையாளர்கள் உணரவே செய்வர்.

மனசாட்சிக்கு பதில் கூற முடியுமா ?

இன்றைக்கு இந்தியாவை ஆளும் மாபெரும் கட்சியென மார் தட்டிக் கொள்ளும் காங்கிரஸ் இயக்கத்தினர், அவர்களது மனசாட்சிக்குப் பதில் சொல்ல முடியுமா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்கத் தவறமாட்டார்கள். போ∴பர்ஸ் பிரச்சினையில் ஒன்றுமே இல்லையென நாடாளுமன்றக் குழுவின் மூலம் ஒரு கண்துடைப்பு நாடகம் நடைபெற்றிருந்தாலும் கூட அந்தக் குழுவின் உறுப்பினர் திரு. ஆலடி அருணா எம்.பி. எழுப்பியுள்ள மறுப்புக் கருத்துக்கள் சிந்திக்கத்தக்கவை என்பது மட்டுமல்ல, மத்தியிலே ஆட்சியிலே இருப்போர் பொறுப்பேற்க வேண்டிய தொன்றுமாகும்.

பொது மக்களுக்குச் சட்ட நுணுக்கங்களும் வெளிநாட்டு ஆயுத வியாபாரிகளின் மாய்மாலங்களும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன்பே, செய்யாத பணிக்குக் கைமாறாக, ஏதேதோ நாடுகளில் உள்ள முகமூடிக் கம்பெனிகளுக்குக் கோடிக் கணக்கில் பணம் தரப்பட்டது என்பதைச் சாதாரண பாமரர் கூட நம்ப மாட்டார்கள். நாடாளு மன்றக் குழுவேகூட இந்தப் பிரச்சினையில் இடைத்தரகர்கள் இருந் ததையும், அவர்களுக்குப் பணம் தரப்பட்டதையும் உறுதிப்படுத்தி யிருக்கிறது. இருந்தாலும் ‘இந்தப் பூனையும் பால் குடிக்குமா’ என்பதைப்போல காங்கிரஸ் கட்சியினர் பேசிவருவது விந்தையிலும் விந்தை.

நீர்மூழ்கி விவகாரம்

நீர் மூழ்கிக் கப்பல்கள் வாங்கிய விவகாரத்தில் இந்தியாவின் காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் என்று வழங்கப்படும் தணிக்கை அதிகாரி என்ன அறிக்கை கொடுத்திருக்கிறார்?

கப்பல்களின் விலையை மதிப்பீடு செய்வதில் பெருத்த தவறுகள் நடைபெற்றுள்ளன என்றும், நீர்மூழ்கிக் கப்பல்களில் கோளாறுகள் இருந்தால் அவற்றை மறுக்காமல், அந்தக் கப்பல்களை வாங்குமாறு கப்பல் படை வற்புறுத்தப்பட்டிருக்கின்றது என்றும் மட்டரகமான கப்பல்களுக்குப் பெருந்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், முதலில் பேசி முடிக்கப்பட்டவிலையை விடத் திடீரென்று ஆறு மடங்குக்கு மேலான விலை கொடுத்து அந்தக் கப்பல்கள் வாங்கப்பட்டன என்றும், மேற்குஜெர்மனி கப்பல்கள் தான் நமது ராணுவ துறைக்குச் சாதகமாக இருந்தன என்றும் ஆனால் இதை இந்திய அமைச்சரகம் சரிவரப் பரிசீலிக்க வில்லை, என்றும், அந்த தணிக்கை அதிகாரி கூறியிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது?

பாதுகாப்புத்துறையில் ஏற்பட்டுள்ள அந்த மாபெரும் தவறுகளுக்கு மத்திய அரசில் ஆட்சியில் இருப்போர் பொறுப் பேற்சுக் கடமைப்பட்டவர்களா இல்லையா? எனவே, குற்றங்கள் சுட்டிக் காட்டப்படுமிடத்து குற்றம் புரிந்தோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ, அத்தகைய குற்றங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுத்து நிறுத்தவோ காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முன் வர வில்லை என்பதைத்தான் போஃபர்ஸ், ஃபேர்பாக்ஸ், மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் விவகாரத்தில் மத்திய காங்கிரஸ் ஆட்சி கடை பிடித்த நடைமுறையின்மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

மாநில சுயாட்சி

மாநில மக்களின் உரிமை, அவர்களின் மொழிமீது இந்திமொழி ஆதிக்கத்தைத் தடுத்தல், மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுகள் அதிக அதிகாரங்களைப் பெற்று இந்திய ஒருமைப் பாட்டுக்குள் சுயாட்சிகளாக விளங்குதல் போன்ற கொள்கைகளில் கூட காங்கிரஸ் கட்சி இணக்கமாக இல்லை. தி.மு. கழகத்தைப் பொறுத்த வரையில் மத்தியிலே கூட்டாட்சியும் மாநிலத்திலே சுயாட்சியும் கொண்டதாக இந்திய அரசியல் அமைப்பு அமைய வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

1947-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் ''இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப்பகுதிகளும், வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும் அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கும்படியான எல்லைகளைக்

...நூலகம்
சென்னை

கொண்டோ அல்லது இப்போதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சி உள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் (Residuary Powers) அப்போது இவற்றுக்கு அளிக்கப்படும்'' என்று குறிப்பிட்டதை மறந்து விட்டு, மத்தியில் உள்ள அதிகாரக் குவியலை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க மத்திய ஆட்சியாளர்கள் தயங்கு வதைத் தி.மு. கழகம் பல கட்டங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றது தேசீய வளர்ச்சிக் குழுவின் முதலமைச்சர்கள் அடங்கிய மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் மாநில சுயாட்சிக் கொள்கை பலமுறை வலியுறுத்தப்பட்டுமிருக்கிறது. தொடர்ந்து அதனை வலியுறுத்தக் கூடிய கொள்கை தெளிவும், உறுதியும் தி.மு. கழகத்திற்கு உண்டு.

தேசிய ஒருமைப்பாடு

பல்வேறு தேசிய இனங்களையும், மொழிகளையும், கலாசாரங்களையும் கொண்ட இந்தியத் திருநாட்டில் ஒற்றுமை, ஒருமைப்பாடு நிலைபெறவேண்டும் என்பதில் நம்பிக்கையுள்ள தி.மு.கழகம் ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்ற கொள்கைக்கு ஏற்ப எந்தவொரு தேசீய இனத்தின மீதும், மொழியின்மீதும். கலாசாரத்தின்மீதும் மற்றொரு இன. மொழி, கலாசார ஆதிக்கம் இருத்தல் ஆகாது என் பதில் திடமாக இருக்கிறது.

எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் தமிழ்நாட்டுமக்கள்இரண் டாந்தரக் குடிமக்களாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக, இந்தி மொழி ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் நுழையவிடாமல் தடுத்து நிற்கும் அரணாகத் தி.மு.கழகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளை வாயளவில் எழுத்தளவில் நிறுத்தாமல், செயலளவிலும் நிலைநாட்டப்பல போராட்டங்களைத் சந்தித்து அடக்குமுறைகளை ஏற்றுக்கொண்டது. தி.மு.கழகம் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

மாநிலத்தின் சுயமரியாதைத் தன்மையைக் காப்பாற்றுவதற்குரிய வீரம் செறிந்த தளபதியாகத் திகழ்வது தி.மு.க. என்று உரிமையுடன் மார்தட்டிக் கொள்ளமுடியும். இந்தக்கொள்கைகளுக்கு மாறாகவும், பணிந்தும், வளைந்தும் அடங்கியும் போகக்கூடிய எந்தவொரு கட்சியாலும் தமிழ்மக்களின் எதிர்காலத்தை வலிவுமிக்கதாகவும் ஒளிமயமாகவும் ஆக்க இயலாது என்பது என் கருத்தாகும்.

மாநில அரசு அலுவலர்கள். ஆசிரியர்கள் பிரச்சினையில் நல்ல முடிவு காண்பது இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு

காண்பது-இந்து அறநிலையத் துறை குறித்துச் சமயச் சான்றோர் களைக் கலந்து முடிவெடுப்பது - வியாபாரிகள் விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது-கைத்தறியாளர்கள் கண்ணீர் துடைப்பது-தமிழகத்தில் மூடப்பட்டுள்ள 35 பெரிய ஆலைகளைத் திறப்பது காவிரி, தெலுங்கு-கங்கைத் திட்டம் ஆகியவற்றில் ஆக்கப் பூர்வமான முடிவு காண்பது-சத்துணவுத் திட்டத்தைத் தொடருவது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது போன்ற வாக்குறுதி களை நிறைவேற்றுகின்ற ஆட்சியாக மாத்திரமல்லாமல், கொள்கை வழி நின்று மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் ஆட்சியாக வும் தி. மு. கழக ஆட்சிதான் திகழ முடியும்.

'எமர்ஜென்சி' எதிர்ப்பு

இந்திய ஜனநாயகத்திற்கு 1975-ல், ''எமர்ஜென்சி'' என்ற பெயரால் சோதனை வந்த போது ஆட்சி கலைக்கப்படும் என்ற மிரட்டலுக்கும் பணியாமல் ஜனநாயகம் காத்திடப் போர்க்கொடி தூக்கியது தி. மு கழகம் என்பதை உண்மையான ஜனநாயக வாதிகள் ஒப்புக் கொள்வர்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், பலமுறை பல்லாயிரக்கணக்கானோர் சிறை சென்றும் தமிழீழ மக்களின் பாதுகாப்புக் கேடயமாகத் தி. மு. கழகம் விளங்குகிறது.

ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றல் படைத்த தமிழக மக்கள் இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத் தங்களின் உரிமைகள் காப்பாற்றப் படவும்-தங்களுக்கு நல்வாழ்வு அமையவும் தமிழக வளம் சிறக்கவும் பயன்படக் கூடிய கருவி தி. மு. கழகம்தான் என்பதை உணர்ந்து தெளிவான முடிவெடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

○ ○ ○

பல்கலைப் புலவர்,
தமிழ்க் ''கா.சு'' நினைவு இலக்கியக் குழு
கசுவரவடிவு அகம் - குழித்தலை.
திருச்சி மாவட்டம். 639 104.



நியு ரெட்சன் பிரிண்டர்ஸ் சென்னை-5